Unnayan [illegible]
V12: No 8 Aug 1980

3L
[illegible]
N30·12·8
210179

396

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி

9, JAN 19

Vol XII AUG. 30. № 8



PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

*N. B*:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our *Bonafide* receipts.

**All Rights Reserved by the Publishers.**

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்

| | |
|---|---|
| | பக்கம். |
| தெய்வ வணக்கம் ... ... ... | 337 |
| ஹிதோபதேசம் ... ... ... | 338—342 |
| தீவில் ஆட்சிபுரியும் மாது ... ... | 342 |
| நாலடி உயரமுள்ள தம்பதிகள் ... | 342 |
| ஞானிகளின் பெருமை ... ... | 343—348 |
| வெளிச்சம் தரும் உலோகம் ... | 348 |
| காலமும் அதன் உபயோகமும்-3 ... | 349—355 |
| தாயைக் கொன்ற பெண் ... ... | 356—357 |
| விநோத வழக்கங்கள் ... ... | 358—361 |
| ஒரே நாளில 300-வகை தேயிலை பானம் | 361 |
| பெண்ணாசை கொண்டவரின் கதி ... | 362 |
| ஆசார வீனன் ... ... ... | 363—364 |
| சமுத்திரத்தை கடந்த பறவை ... | 364 |
| இன்னொருவர்க்கு இட்டுப் புசிக்கும் போஜனமே சிறந்ததென்பது ... | 365—366 |
| அதிக ஆசை அதிக நஷ்டம் ... | 367—370 |
| சுத்தமே சுகத்திற்கு ஆதாரம் ... | 371—372 |
| விகடப்பா ... ... ... | 372 |
| சபாநாதர்பேரில் முத்துத்தாண்டவர் கீர்த்தனை 4 ... ... ... | 373—374 |
| கண்ணுள்ள மரங்கள் ... ... | 374 |
| நடராஜப் பத்து .... ... ... | 375—376 |
| பஞ்சுக் கட்டை ... ... ... | 376 |
| குடியினால் விளையும் கேடு .... | 377—384 |



சிஷ்யன் குருவை வணங்கி உபதேசம் பெறல்.

பாலவிநோதினி புத்தகம் XII
ஜூலை சஞ்சிகை 297-பக்கம் பார்க்கவும்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

| தொகுதி 12 | 1930 ஞு ஆகஸ்டு மாதம் | பகுதி 8 |
| --- | --- | --- |

### தெய்வ வணக்கம்

பிரமனன் றெழுதிய படிக்கின்ப துன்பங்கள்
    பிசகாமல் எய்துமெனினும்
ப்ரபஞ்சத்தில் மெய்த்தெய்வ முனையன்றியில்லையிது
    ப்ரத்யக்ஷமாகு மதனால்
கரதல முகிழ்த்து முத்தேவர் தொழுமேலான
    கடவுள் நீ என்றுவேதம்
கழறுமொழி யுறுதியா லெவைபெறுத லரிதுநீ
    கருணைகடாட்சம் வைத்தால்
சரணார விந்தமென தரணாக நின்றுவெஞ்
    சஞ்சலந் துயரம் வறுமை
தமியனிடம் நாடாம லாண் டருள வேண்டினேன்
    சண்முக குமாரதுரையே
பரமகுரு நாதனே திறமுதவு போதனே
    பகாரிய சதுர் வேதனே
பழமறை கடருசீல மழவிடைய ருள்பால
    பழனிமலை முருகேசனே.

(பாரதி.)

# ஹிதோபதேசம்

(1) பாண்டவர்கள் வனவாசம் போனபோது துரியோதனனை ஊரார் நிந்தித்தனர். நாரதமகரிஷியும் விதுரரும் "இனி நீங்கள் வாழப்போவதில்லை. பாண்டவர்களுடைய கோபம் உங்களைச் சும்மா விடாது" என்றனர். துரியோதனன் முதல் யாவரும் அதுகேட்டு அஞ்சினர். அப்போது சஞ்சயன் என்கிற மேதாவி, "புத்திகெட்ட துரியோதனன் பாண்டவர்களின் மனைவியான பாஞ்சாலியைச் சபையில் இழுத்து வந்து அவமானப்படுத்தினான். அபஜயம் யாருக்கு வருகிறதோ அவர்களுடைய புத்தியைத் தேவர்கள் கெடுத்துவிடுவார்கள். கேடுகாலம் வந்தபோது அநியாயம் நியாயம்போலத் தோன்றும். நன்மையெல்லாம் தீமையாகவும் தோன்றும். காலம் தண்டத்தினால் தலையை உடைப்பதில்லை. காரியங்களை மாறுபடத் தோன்றுவிப்பதுதான் காலத்தின் வன்மை" என்று கூறினான்.

(2) தனவந்தர்களிடம் கைகட்டி நின்று காத்து ஜீவனம் செய்வதைவிட இழிவான தொன்றுமில்லை. எருதின் வருத்தம் காக்கை யறியுமா? அறியாது. அதுபோல் தனவந்தர்கள் ஏழைகளின் வருத்தத்தை உணரமாட்டார்கள். ஆகையினால் அவர்களிடம் கைகட்டிச் சேவகம் செய்கிறவன் தனக்குவரும் சங்கடங்களையும் அவமானங்களையும் பொறுத்துக்கொண்டு



அவர்களின் சௌகர்யங்களுக்குக் காத்திருக்கத் தக்க பொறுமையை வகிக்கவேண்டும். இப்படி எத்தனை நாட்களுக்கு வயிறுவளர்க்க இயலும். இதனாலே தான் இதனை இழிவென்று கூறுகின்றனர் பெரியார்.

(3) வாளினா லறுத்த புண்ணும் தீயினாற் சுட்ட புண்ணும் ஆறும். ஆனால் வாயினாற் சுட்ட புண் ஆறுவதில்லை. இந்த வாக்கியத்தை மனிதன் அடிக்கடி சிந்தித்துக் கொண்டு தன் வாக்கிலிருந்து வெளிப்படும் மொழிகளெல்லாம் வசை மொழியா யில்லாமல் இனிய மொழியாகவே வெளிவரும்படி நடந்துகொள்ள வேண்டும். இனிய மொழி பேசாமல் கடுமொழி பேசுவது, கனி யிருக்கையில் காயைத் தின்பதற்கும் ஆண்டவனுடைய துதிகளிருக்க ஒப்பாரி பாடுவதற்கும் சமானமாகுமாதலால், விவேகிகள் மறந்தும் கடுமொழி பேசுவதில்லை. பாஞ்சாலி, துரியோதனன் தன்னை இராஜசபைக்கு இழுத்து வந்து துயிலுரியச் செய்த கொடுமையை விட அவன் தன்னை நோக்கி, "ஏ மிருகமே" என்று இழிவு படுத்திப் பேசியதே பொறுக்க முடியாத துக்கந் தருவதா யிருக்கிறது என்று தரும புத்திரிடம் கூறினாள்.

(4) பொறுமைக்கும் கோபத்துக்கு முள்ள வித்யாசம் மலைக்கும் மடுவுக்கு முள்ளதாகும். இவற்றால் கிடைக்கக் கூடிய லாப நஷ்டங்கள் எளிதில் புலப்படுவதில்லை. விவேகிகளே உணர்கிறார்கள். ஆதலால் அவர்கள், எச்சமயத்திலும் தங்களுக்கு முன்னே பொறுமை என்கிற உருவத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு

பேசுகிறார்கள். பொறுமையை வகித்த பாண்டவர்கள் அடைந்த பெருமையைக் கவனியுங்கள்! கோபத்தைக் கொண்ட நகுஷன் கதியைக் கவனியுங்கள். நகுஷன் கோபத்தினால் மலைப்பாம்பா னானன்றோ?

(5) பொறுமையுடைய மாணவனிடமே குரு அன்பு பாராட்டுவார். பொறுமையுடைய மனைவியி னிடமே புருஷன் அன்பு பாராட்டுவான். பொறுமை யுடைய பக்தனிடமே கடவுள் கருணை பாராட்டு வார். தமக்கு நேரிட்ட கஷ்டங்களை யெல்லாம் பொறுத்த மகாத்மா கபீர்தாஸ் ஸ்வாமிகளுக்குப் பகவான் கருணை செய்ததைக் கவனியுங்கள்.*

(6) நெறி தவறியவனுடைய நட்பை உடனே விட்டுவிட வேண்டும். அதுதான் விவேகத்திற்கு அழகு. குலமேன்மையாலும் கல்வியாலும் இறுமாப் புற்றவர்களிடம் விவேகிகள் நெருங்கமாட்டார்கள்; அவர்களைப் பரம மூடர்களிலும் மூடர்கள் என்று ஒதுக்குவர்; தங்கள் கூட்டங்களிலே மேலும் தங்கள் சபையிலிருக்கவும் இடந்தரமாட்டார்கள்.

*கடந்த சில மாதங்களுள், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியார், வரகவி, திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய கபீர்தாஸ் என்னும் நாடகத்தைப் பல தடவை இச்சென்னை யில் நடத்திக்காட்டினார்கள். அந்த நாடகத்தைச் சென்னையில் அநேகர் பார்த்துமகிழ்ந்தனர். மகாத்மா கபீர்தாஸும் அவர் மனை வியாரும், புத்திரன் கமாலும், தங்களுக்கு நேரிட்ட கஷ்டங்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டு எல்லாம் ஈசன் செயல் என்று இறுமாந்திருந்து முடிவில் நித்யவாழ்வு பெறும் அழகு வெகு நன்றாகக் காட்டப்பட்டது. நடிகர்களில் கமாலாக நடித்த சிறுவ னின் சாமர்த்திய நடனம் உண்மையில் கமாலே உதித்தானோ வென்று வியப்புறும்படி யிருந்தது.



(7) எப்பொழுதும் ஒருவன் தன் பாபத்தை யெண்ணி அது பற்றி வருந்தித் திருந்துவதுடன் தன் புத்திரன், பௌத்திரன் செய்யும் பாபங்களையும் கவ னித்து அவர்களையும் திருத்தவேண்டும். இல்லாவிட் டால் அது, ஒருவனுக்கு அமித போஜனம் எவ்வளவு தீமை செய்யுமோ, அவ்வளவு தீமை செய்யும் என்று சுக்ராசாரியார் விருஷபர்வா என்கிற அசுரவேந்தனை நோக்கிக் கூறினார்.

(8) புத்திரனாவது, புருஷனாவது இல்லாத மாதுக்கு இகபரசுகமில்லாமற் போகும். புத்தியில்லாத புருஷனுக்கும் நல்ல நடவடிக்கைகளில்லாத பிள்ளை களுக்கும் பெருமையில்லாமற் போகும். வாசனையில் லாத புஷ்பத்திற்கு மதிப்பில்லாமற் போவது போல் உதார குணமில்லாத தனவந்தனுக்கும் பெருமை யில்லாமற் போகும்.

(9) மனிதர்களுக்கு தேகம் மெலிந்தாலும் ஆசை மெலிவதில்லை. மூடர்களால் ஆசையை ஒழிக்க முடியாது. சரீர முள்ளவரைக்கும் ஆசையும் இருக் கும். ஆசையை விட்டொழித்தவனே சுகமடைவான். அதாவது வீணுக்கெல்லாம் ஆசைப்படுவது கூடாது. படிப்பிலே விருத்தியடைய வேண்டு மென்பதில் பிள்ளைகளே உங்களுக்கு ஆசையிருக்க வேண்டிய தவ சியம். ஆனால் மற்ற பிள்ளைகள் வைத்திருக்கும் வஸ் துக்களிலாவது அணிந்திருக்கும் உடைகளிலாவது இன்னும் உங்களுக்கு அவசியமல்லாத வேறெந்தவஸ்து விலாவது நிஷ்பிரயோஜனமாய் ஆசை கொள்வதை ஒழிக்க வேண்டும்.

(10) யயாதி என்கிற அரசனுக்கு அவன் பிள்ளைகளில் ஒருவன் கீழ்ப்படிதலுள்ளவனாக இருந்தான். அவனுக்கு அவன் தன் அரசைக் கொடுத்தான். அப்பொழுது யயாதி மகனை நோக்கி, "மைந்தா!— பொறாமை, கபடம், துவேஷம், மோசம் முதலிய தீய குணங்களை விட்டுவிட வேண்டும். இதைக் கவனி— வல்லமை யற்றவன் சினங்கொள்வான். தீயவன் அறநெறிகளைப் பழிப்பான். அறநெறிதவறியவன் தருமிஷ்டனைப் பழிப்பான். தீயவன் சாதுவைப் பழிப்பான். ஏழை பணக்காரனைப் பழிப்பான். என்ன ஜாதியிலே பிறந்தாலும் நல்லவர்களுக்குப் புகழ்ச்சியுண்டு" என்று புத்திமதி கூறினான்.

---

### தீவில் ஆட்சிபுரியும் மாது

*பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள பாது என்னும் தீவில் சுமார் ஐந்நூறு காட்டுமிராண்டிகளை ஸ்ரீமதி. ஜாஹெல் என்னும் ஐரோப்பிய மாது அடக்கி ஆண்டுவருகிறார். அம்மாது ஆரம்பத்தில் அவர்களை அச்சுறுத்தி அடக்கிவிட்டபடியால் இப்போது எத்தகைய குழப்பமுமின்றி ஆண்டு வருகிறார். அவர்கள் இம்மாதை 'வெள்ளைத் தாய்' என்று அழைக்கின்றார்கள். ஸ்ரீமதி ஜாஹெல் அவர்களுடைய குடும்பத் தகரார்களையும் மாஜிஸ்ட்ரேட் போலத் தீர்த்து வைக்கிறார். வழக்கு விசாரணை முறையெல்லாம் தற்கால ஆங்கிலக் கோர்ட்டுகளில் நடைபெறுவதுபோல நடைபெறுகின்றன.*

### நாலடி உயரமுள்ள தம்பதிகள்

*இங்கிலாந்தில் லில்லிக்கருகிலுள்ள ஹாட்மாண்ட் என்னுமிடத்தில் சமீபத்தில் ஒரு விவாகம் நடைபெற்றது. அதில் மணமகன் 4-அடி உயரமிருந்தான். மணமகள் எட்டு அங்குலம் குறைவாக அதாவது 3-அடி 4-அங்குலம் உயரமிருந்தாள்.*

## ஞானிகளின் பெருமை.

முன்காலத்தில் பாகயக்ஞன் என்னும் பெயர் கொண்ட ஒரு பிராமணனிருந்தான். அவன் உத்தம குணங்களுக்கு இருப்பிடமாய் விளங்கிய ஒரு யோகி. அவனுக்குச் சசிவர்ணன் என்னும் பெயர் கொண்ட ஒரு புதல்வனிருந்தான். அவன் மகாபாதகனென்று ஊரெங்கும் இகழத்தக்க விதம் நடந்துவந்தான்.

சசிவர்ணன், தாய் தந்தையர் பேச்சைக் கேட்பதில்லை; கல்வியில் விருப்பமில்லாதவனாய்க் கயவர் கூட்டுறவிலேயே விருப்பமுடையவனாய்த் திரிந்தான். பிராமணர்க்குரிய ஒழுக்கத்தை அவன் முற்றும் விட்டொழித்துத் தறிதலையாய்த் திரிந்தபடியால் நாடோறும் செய்யவேண்டிய ஸந்தியாவந்தனாதிகளை அவன் செய்வதேயில்லை. ஸந்தியாவந்தனம் செய்பவர்களையும் ஜபம் செய்பவர்களையும் நிந்திப்பான். இதையன்றித் தெய்வ நிந்தனை, சிவஞான நிந்தனை முதலியனவும் புரிந்து வந்தான். யாரேனும் ஏனடா இப்படியலைகிறாய் என்று கேட்டால் அவர்களைச் சாகும்படி அடித்துத் துன்பப்படுத்துவான். பழிக்கும் பாபத்துக்கும் பயப்படமாட்டான். வீட்டுச் சொத்துக்களையெல்லாம் திருடிப் பரத்தையர்க்குக் கொடுப்பான். தன் பெற்றோர்களைக்கவனிக்கவே மாட்டான்; அவர்களை மனம் வருந்தப்பேசி வெறுப்பான்; சிலசமயம் பாதகன் அவர்களைக்

கோல்கொண்டு சாடியதுமுண்டு. அவனை அவன்தாய் தந்தையர் சபிக்கா விட்டாலும் ஊரார்பலர் சபிப்பதுமுண்டு. சபிப்பதுடன் விடாமல் "ஐயோ இந்தக் கோபுரவஸ்துவை! இந்த ஏமனேறும் பரியை, இந்தக் கூரையில்லா வீட்டை இவர்கள் பெற, செய்த தவந்தான் யாதோ தெரியவில்லை" என்று அடிக்கடி பேசவுந் தலைப்பட்டனர்.

இப்படியிருந்த சசிவர்ணன் பிறர் பொருளைத் திருடிக் கூத்துக்கும் கூத்திக்கும் கொடுத்துக் களித்தது மல்லாமல் சூதாட்டத்திலும் குடியிலும் செலவழித்து மகிழ்ந்தான்; அழிவழக்காடி அன்னியர் பொருளைக் கவர்வதிலும் சமர்த்தனானான்.

இவ்வாறு ஒழுக்கம் கெட்டபடியால் அவன் அக்கிராமத்தை விட்டுப் பறைத் தெருவிற்குச் சென்று அங்கே பறையர் சாகவாசம் வைத்துக் கொண்டலைவதானான். எல்லோரும் அவனை வெறுத் தொதுக்கினார்கள். அவன் வெட்கங் கெட்டலைந்தான்.

அப்பால் சசிவர்ணன் அளவில்லாத நோய்களுக்குள்ளாய் வருந்தினான். பாபத்திற்குத் தண்டனையில்லாமற் போகுமா? வியாதிகளுடன் நில்லாமல் பின்னால் பேயும் அவனைப் பிடித்துக் கொண்டது. பிரம்மஹத்தியும் பிடித்து கொண்டது. 'இளைத்தவன் தலையில் ஈறும் பேனும்' என்பது கேட்டதில்லையா? இதனால் அவன் பட்ட கஷ்டங்களுக்கு அளவே யில்லை.

இவ்வாறு இவன் பூலோகத்திலே வருத்தப்படுகையில் இவனுடைய பாபம் இவனுடைய பிதிர்க்களையும்



தாக்கியபடியால் அவர்கள் நரகத்தில் விழுந்து வருந்தினார்கள்.

சசிவர்ணனுடைய தந்தை பரம சாதுவல்லவா? பரம புண்ணிய சீலனன்றோ? அவன் தன்னுடைய இப்படிப்பட்ட நிலையைக் கண்டு மனம் வருந்தி நெடுநாள் என்ன செய்வதென்கிற ஆலோசனையி லிருந்து, அப்பால் சகல ஜீவ தயாபரனாகிய சிவபெருமானை அடைந்தா லல்லது இந்தத் தொல்லையினின்று விடுபட வழியில்லையென்கிற தீர்மானத்திற்கு வந்து, சதாகாலமும் சிவ பெருமானைத் துதித்துத், தியானஞ் செய்வதிலேயே கருத்தைச் செலுத்தினான்.

இப்படி ஈசுவரனைச் சரணமடைந்த அந்தப் பாகயக்ஞனிடம் ஒருநாள் தேவபக்தர் என்னும் பெயர் கொண்ட முனிவரொருவர் வந்து, அவனுடைய துக்க நிலையைக் கண்டு, "ஏன் துக்கப்படுகிறாய்? காரணமென்ன?" என்று கேட்டார்.

பாகயக்ஞன் அவரை வணங்கி, "ஸ்வாமி எனக்குப் புத்திரனொருவனிருக்கிறான். அவன் செய்த பாதகத்துக்கு அளவில்லை. அவைகளை நினைத்து வருந்துகிறேன். ஸ்வாமி அவன் ஈடேறும் வழியேதேனு முண்டோ? சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

தேவபக்தர் அவனை நோக்கி, "ஸ்ரீ பரமேச்வரன் வசிக்கிற க்ஷேத்திரங்களுக்கு அளவில்லை. அவைகள் எல்லாவற்றிலும் **கோபர்வதம்** சிறந்தது. அதில் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கிறார். அங்கே உமா

தேவியார் பூசித்தபடியால் ஸ்வாமிக்கு, **சத்தியீசர்** என்று திருநாமம் ஏற்பட்டிருக்கிறது. அவரைத் தரிசனம் செய்தவர்கள் புக்தி முக்திகளையும் நினைத்த காரியசித்திகளையும் அடைவார். அந்த க்ஷேத்திரத்தில் **மகாநந்தபராயணன்** என்று ஓர் யோகியிருக்கிறார். நீர் உம்முடைய புத்திரனை யழைத்துக்கொண்டு அங்கே போய் அந்த மகானைச் சரணமடைவீரானால் அவர் வழி காட்டுவார்"—என்று கூறினார்.

அதைக் கேட்டதும் பாகயக்ஞன் "இனி நாம் கடைத்தேறினோம்' என்றெண்ணி மகிழ்ந்து அவரைப் பணிந்து, "தமது ஆக்ஞைப்படி செய்கிறேன்" என்று கூறிப் பின் தன் மகனை அழைத்துக்கொண்டு அந்தத் திவ்ய க்ஷேத்திரம்போய் அந்த மகானைக் கண்டான். முதலில் அந்த மகான் அவர்களைக் கண்டதும், நீரிருவரும் இந்த ஸந்நிதிக்குப் பக்கத்திலிருக்கும் திருக்குளத்தில் ஸ்நானம் செய்து பின் சிவபெருமானுடைய ஆலயத்திற்குள் போய் ஆலய வலம் வந்து ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வாருங்கள். அப்பால் நான் உங்களைக் கவனிக்கிறேன்" என்று கூறியனுப்பினார்.

பாகயக்ஞன் உடனே தன் மகனுடன் அக்குளத்திற்குச் சென்று ஸ்நானஞ்செய்து மடிசெய்துகொண்டு நேரே சிவாலயத்துக்குள்ளே போய் முறைப்படி வலம் வந்து ஈசுவரதரிசனம் செய்து விபூதிப்ரஸாதம் பெற்றணிந்துகொண்டு யோகீந்திரரிடம் வந்து, தன் மகனுடைய தீயசெய்கைகளை யெல்லாம் கூறி அழுதான்.



யோகி சிவபெருமானைச் சிந்தித்துப் பாகயக்ஞனுடைய மகனாகிய சசிவர்ணனுடைய முகத்தைப் பார்த்தார். பார்த்தவளவில் அவனைப்பற்றியிருந்த நோய்களும், பேய்களும், பிர்மஹத்தியும் நீங்கின. சசிவர்ணனுக்குக் கொஞ்சம் அறிவு தோன்றியது. உடனே அவன் யோகியின் பாதங்களிலே பணிந்து அவரைத் துதித்துத் தான் செய்த பாதகங்களை யெல்லாம் எண்ணி வருந்தினான். பின் அந்த ஞானி அவனைத் தமக்கொரு மாணவனாகக்கொண்டு தமது பணிவிடையில் நியமித்தார்.

சசிவர்ணன் அடக்கமாயும் வணக்கமாயு மிருந்து அந்த ஞானியார்க்குப் பணிவிடை புரிந்து வந்து நாளடைவில் அவருடைய பரிபூர்ணமான ஆசீர்வாதத்திற்குப் பாத்திரமானான். சிவபெருமானை வழிபடும் முறையெல்லாம் அவர் அவனுக்குப் போதித்து அவனை நல்ல வழிக்குக் கொண்டு வந்தார். அந்த சிவ ஞானியாரின் அன்புக்குப் பாத்திரமான சசிவர்ணனுடைய பாதகங்களிற் பல ஒழிந்தன. ஞானியாருடைய கட்டளைப்படி அவன் நாடோறும் பசுக்களுக்குப் புல் போட்டு வந்தான். அதனால் சில பாதகங்கள் ஒழிந்தன.

இப்படிப் பணிவிடை புரியும் சசிவர்ணனுடைய மனத்தைப் பரிசோதிக்க வெண்ணிய சிவஞானி யானவர், அவனுக்குத் தமது எச்சில் இலையைக் கொடுத்தார். அவருடைய எச்சிலை அவன் அமிர்தம் போல் மகிழ்ந்தேற்றுக் கொண்டான். அதைப் புசித்த

வுடன் சசிவர்ணனுடைய பாதகங்கள் அனைத்தும் நீங்கின. பூர்வகர்மங்களும் எரிந்து போயின.

இந்த நிலைமையை யடைந்த சசிவர்ணன் முன் தான் தன் ஆயுள் நாட்களை வீணாய்க் கழிக்க நேர்ந்ததை யெண்ணி வருந்தினான். சசிவர்ணனுடைய பக்குவ நிலையை யுணர்ந்த சிவயோகி யானவர் அவனிடம் மகிழ்ந்து அவனுக்குத் தமது திருக்கரத்தினால் திருநீறிட்டார். சசிவர்ணன் ஞானியாருடைய திருவடியிலே பணிந்து அவரைத் துதித்தான். ஞானியார் அவனைத் தம் அருகில் உட்கார வைத்துக்கொண்டு தமது திருக்கண்மலர்ந்து அருட்பார்வையாகப் பார்த்து திருக்கரத்தைச் சிரசின் மேல் வைத்து அவனுக்கு ஞானோபதேசம செய்தருளினார். அவன் அந்த ஞானோபதேசமடைந்த பின் சிவபெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமாய் முடிவில் முத்தியடைந்தான். அவனுடைய மாதாபிதாக்களும் முத்தியடைந்தனர். முன்னால் இவனாலே நரகத்திலே தள்ளுண்ட பிதிர்க்களும் கரை யேறினார்கள். சிவஞானியினுடைய பெருமையை உலக முழுவதும் புகழ்ந்தது; சிவஞானியினுடைய பணிவிடையே முத்தி சாதனமென்றுமுணர்ந்தது.

---

## வெளிச்சம் தரும் உலோகம்

தென்மேற்கு ஆபிரிக்காவில் துத்தநாகம் போன்ற ஒரு வகை உலோகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தேய்த்தாலாவது அல்லது எதன் மீதாவது அடித்தாலாவது உடனே பிரகாசமான வெளிச்சத்தைத் தருகின்றது; தண்ணீரின் அடியில் இருக்கும்போதும் அது இத்தகைய வெளிச்சத்தைத் தருகின்றது.

# Time and its use III

## காலமும் அதன் உபயோகமும் 3

கால அளவைப்பற்றி ஆங்கில அநுபவ மேதாவியாகிய வில்லியம் காபெட் (William Cobbett) பின்வருமாறு தெரிவிக்கிறார்.—

நீ உன் காலத்தைச் சரியானபடி செலவழிப்பதே நீ முதல் முதலில் செய்யவேண்டிய காரியம். நீ அடைகிற மரியாதை யாவும் உன்னுடைய செய்கையையே பொருத்திருக்கின்றன. நீ பணக்காரனா யிருந்தால் மரியாதையை விலைக்கு வாங்கலாம். அப்படி விலைக்கு வாங்குவது உசிதமல்ல. நீ மரியாதையை அடைய வேண்டுமானால் உன் அந்தஸ்திலிருக்கும் சாதாரண மனிதர்களைவிட அதிகமாக உழைத்து, நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கு நீ உன் காலத்தைச் சரியான வழியில் உபயோகப்படுத்த வேண்டும். அப்படி உபயோகப் படுத்துவதில் உன் நிலைமைக் கேற்றவாறு இராக்காலத்தில் விளக்கு வைத்துக்கொண்டு வேலை செய்வதை விடப் பகற் காலத்தை வீணாக்காமல் அதில் அதிகமாக வேலை செய்ய வேண்டும். சிலர் ஒரு வேலையுமில்லாமல் சும்மா பேசுவதற்கென்றே உட்கார்ந்து பேசுவது வழக்கம். அதிலும் எதைப்பற்றிப் பேசுவதென்று தெரி

யாமற் போகும் வரையில் உட்கார்ந்து பேசுபவரும் உண்டு.

இப்படி வழக்கம் செய்து கொண்டவர்களுக்கு அதிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வது சாத்யமாகாமற்போகும். ஒருவன் சீக்கிரம் படுத்துக் கொள்ளாமற் போனால் விடியற்காலம் சீக்கிரம் எழுந்திருக்க முடியாது. வயது முதிர்ந்தவர்களைக் காட்டிலும் சிறுவர்களுக்கு அதிக நித்திரை அவசியமாகும். ஒரு நாளைக்குக் குறைந்தது 8 மணிநேர நித்திரையாவது வேண்டும். பாதிராத்திரிக்கு முன் ஒரு மணி நேரம் தூங்குவது பாதிராத்திரிக்குப் பின் இரண்டு மணி நேரம் தூங்குவதற்கொப்பாகும். சீக்கிரமாகப் படுத்துக் கொண்டு, சீக்கிரமாக விடியற்காலத்தில் எழுந்து, எழுந்த நேரத்தைச் சரியான வழியில் உபயோகப் படுத்தாவிட்டால் அது பயன்படாமற்போகும்.

## (Morning Gowns and Slippers)

காலையில் உடுத்துக் கொள்ளும் உடையென்று ஒன்றை அந்தக் காலத்தில் ஏற்படுத்தியவர்களுக்கு அதிகப்படியான வேலையிருந்திராது என்பது திண்ணம். வேறு யாராவது சம்பாதித்து வைத்திருந்து வீட்டில் உட்கார்ந்துகொண்டு அதைச் சாப்பிடுகிறவர்களுக்கும் வேறு வேலையில்லாமல் உடுப்பதும் உண்டு களிப்பதுமாயிருப்பவர்களுக்கும் அடிக்கடி உடை மாற்றுவது சௌகரியமாயிருக்கும். ஆனால், உழைத்துச் சாப்



பிடுகிறவர்களுக்கும் உழைப்பினால் தன்மதிப்பை யடைந்து அதனால் தம்மைத் தமக்கும் பிறருக்கும் உபயோகமாகும்படி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் அடிக்கடி உடைமாற்றுவது சாத்யமில்லை.

நீ எந்த விதமான தொழிலிலிருந்தாலும் அடிக்கடி உடைமாற்றாமல் நாள் முழுதும் வேலை செய்ய ஒரே தடவை உடை அணிந்து கொண்டு விடு. அதையும் அதி சீக்கிரத்தில் அணியப்பழகு.

முகம்பார்க்கும் கண்ணாடி என்று ஒன்றிருக்கிறதே. அதைப்போல் உபயோகமற்றது வேறு ஒன்றுமே கிடையாது. அடிக்கடி ஒருவன் தன் முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்வதனால் அவன் நிறம் மாறி அவன் முகம் அதிக அழகாய் விடப்போகிறதா? கண்ணாடியில் முகத்தை அழகு பார்த்துக் கொள்வதில் கழியும் நேரத்தைப் போல் வீணேகழியும் நேரம் வேறு எதுவுமே இல்லை.

## Self-Shaving

நாம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது, ஒரு வருஷத்திற்கு ஒரு முறையாவது க்ஷவரம் செய்து கொள்வதானால் அதைப்பற்றி இங்கு குறிப்பிடுவது அநாவசியமாகும். ஆனால் பிரதிதினம் செய்து கொள்ள வேண்டியிருப்பதால் அதைப்பற்றி அவசியம் இங்கு பேச வேண்டியதாயிருக்கிறது. இது ஒரு ஐந்து நிமிஷவேலை. சிலருக்கு அரைமணி நேரமும் அதற்கு மேலும் ஆகிறது. சராசரி [illegible] நிமிஷம்

தமிழ்நாடு
2/11/79

வைத்துக்கொண்ட போதிலும் ஒரு நாளில் வேலை செய்யவேண்டிய பகல் காலத்தில் 48-ல் 1 பங்கு க்ஷவரத்திற்காகச் செலவிடப்படுகிறது. ஒரு சமயத்தில் ஸர் ஜான்ஸீங்க்ளேர் Sir John Sin clair என்பவர் ஜான்ஸ்டன் Johnstone என்னும் பிரபுவை அவருடைய மகனுக்கு லாடின் (Latin) கற்றுக் கொடுக்கப் போகிறீராவென்று கேட்டதற்குத் தான் அதை விட முக்யமானதாகவுள்ள ஒரு விஷயத்தைக் கற்றுக்கொடுக்கப் போவதாகச் சொன்னார். அது என்னவென்று கேட்டபோது அவர் "க்ஷவரம் செய்து கொள்ளும்போது குளிர்ந்த ஜலம் உபயோகப்படுத்தவும் கண்ணாடி பார்க்காமல் க்ஷவரம் செய்து கொள்ளவும் கற்றுக்கொடுக்க உத்தேசித்திருப்பது"—என்றார். அப்படியே அவர் கற்றுக்கொடுக்கவும் செய்தார். இந்த மாதிரி ஒரு பழக்கம் செய்து வைத்ததற்கு அவர் குமாரன் அவருக்கு நன்றியுள்ளவனாகவே இருந்திருக்க வேண்டும். இந்தச் சாதாரணமான காரியத்திலிருக்கும் உபத்திரவத்தைக் கவனியுங்கள். காலையில் எழுந்தவுடன் இதற்காகச் சுடு தண்ணீர் தயாரிக்க வேண்டும். சில சமயங்களில் இதற்காகவே தனியாக அடுப்பு மூட்ட வேண்டிவரும், இதற்கு ஒரு வேலைக்காரன் வேண்டும், அல்லது நாமே செய்யவேண்டும். தயார் செய்து கொண்ட பிறகு க்ஷவரம் செய்து கொள்ள ஆரம்பிப்பதனால் காலதாமதம் ஆகிறது. சில சமயங்களில் க்ஷவரம் செய்துகொள்ள முடியாமலே போகிறது. முடியாமற்போனால் அன்று முழுதும் அருவருப்புடன் அவலக்ஷணமான முகத்தோடு காலங்கழிக்க நேரிடும்.



நீ பிரயாணம் போகிற காலத்தில் தங்கியிருக்கும் சத்திரத்திலுள்ள வேலையாட்களின் தயவுக்காகக் காத்திருக்கும்படி நேரிடும். அதனால் காலையில் உடையணிந்து கொண்டு வெளியே புறப்பட நாழிகையாய் விடும். வெளியே போய் வேலை செய்ய மிகவும் அநுகூலமான காலை வேளையை வீணே கழித்து விட்டு நேரஞ்சென்று வெளியே புறப்பட்டால் இருட்டுக்கு முன் நல்ல வேளையில் காரியங்களை முடித்துக்கொண்டு வீடு திரும்புவதற்குப் பதிலாக இருட்டில் கஷ்டப்பட வேண்டிவரும். இவை முழுதும் அற்பகாரியமாகிய க்ஷவரத்தினால் ஏற்படுகின்றன. ஒரு சிறிது தாமதத்தினால் எவ்வளவு முக்கியமான காரியங்கள் பிரதிதினம் கெடுகின்றன. எந்த நிமிஷத்திலும் வெளியே புறப்படுவதற்குத் தயாராயிருக்க வேண்டும். நான் க்ஷவரம் செய்து கொண்டு உடையணிந்த பிறகு தான் வெளியே புறப்படமுடியும் என்று சொல்லாதே. நீ எந்த வேலையில் இருந்தபோதிலும் ஒரு நாள் முழுதும் வேலை செய்ய ஒரே தடவையில் உடையணிந்து கொண்டு தயாராயிருக்க வேண்டும். இந்த முக்யமான காரியத்தில் நீ ஒருபொழுதும் தவறக்கூடாது. இதைச் சிறு வயதிலிருந்தே பழக்கத்துக்குக் கொண்டு வர வேண்டும். இந்த வழக்கம் உனக்குச் சரிசமானமானவர்களிடத்தில் விசேஷ நன்மையைத் தருவதுடன் உன் வாழ்நாள் முழுதும் உனக்கு மிக்க அநுகூல

மாயிருக்கும். இது மிகவும் அற்பவிஷயமாகக் காணப்பட்டபோதிலும் வாழ்நாளில் கவனிக்க வேண்டியவைகளில் ஒன்றாகிறது.

எனக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள சாமர்த்தியத்தைக் காட்டிலும் நான் இவ்விஷயங்களைக் கவனித்து ஒரு சிறிதும் தவறாது நடந்து வந்ததே, என் வாழ்நாளின் முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனமாகிறது.

காலத்தை அளவு படுத்திச் செலவு செய்யும் வழக்கத்தை நான் என் சிறு வயதிலேயே கைக்கொள்ளாமற் போயிருந்தால் என்னுடைய சாமர்த்தியம் ஆற்றல் எல்லாம் ஒரு சிறிதும் பயன்பட்டிரா. எனக்கு இராணுவ உத்தியோகத்தில் விசேஷ மதிப்பு ஏற்பட்டது. இவ்விதமாகக் காலத்தை அளவு படுத்தி உபயோகப்படுத்திக் கொண்டு வந்ததினாலேயே ஒழிய வேறெதினாலேயுமல்ல. நான் எப்போதும் வேலைக்குத் தயாராயிருப்பேன். நான் பத்துமணிக்கு வேலை துவக்க வேண்டியிருந்தால் 9 மணிக்கே தயாராயிருப்பேன். என்னாலே எந்தக் காரியமும் ஒரு நிமிஷம் கூடத் தவக்கப்படாது. எனக்கு இருபது வயதிற்குள்ளாகவே காலாட் சேனையின் கீழ்த்தலைவன் பதவியிலிருந்து முப்பது ஸர்ஜண்டுகளுக்கு மேல் ஸர்ஜெண்டு மேஜராக நான் உயர்த்தப் பட்டேன். என்னுடைய இந்த அந்தஸ்து எல்லாருக்கும் பொறாமையையும்வெறுப்பையும் உண்டாக்கியிருக்கும். ஆனால் நான் மேற்கொண்டிருந்த வைகறைத்துயிலெழும் வழக்கமும், காலத்தை அளவு



படுத்தி உபயோகிக்கும் நேர்மையும் மற்றவர்களிடத்தில் இல்லாததாலும் அவர்கள் அப்படி நடக்க முடியாததாலும் அவர்கள் என்னிடம் பொறாமை கொள்ளக் கூடவில்லை.

மற்றவர்கள் வேலைக்குத் தயாராவதற்கு முன்னாலேயே நான் தயாராயிருப்பேன். மேல் அதிகாரிகளில் அநேகர் நேரஞ்சென்று வேலையைத் துவக்கி வெயிலில் அவஸ்தைப்பட்டுச் சாப்பாட்டு நேரத்தில் சாப்பாடில்லாமலும், சாவகாசமென்பது ஒரு சிறிதும் இல்லாமல் வேலைகளை அரையும் குறையுமாக நடத்துவார்கள். வேலைகள் ஒழுங்காக நடைபெறா. கீழ் உத்யோகஸ்தர்கள் உத்ஸாகமில்லாமல் பலவித அவஸ்தைகளுக்குள்ளாவார்கள்.

நான் தளகர்த்தனாயிருந்த காலத்தில் காலாகாலத்தில் வேலையைத் துவக்கி காலத்தில் முடித்து விடுவேன். கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு எப்போதும் போதுமான சாவகாசம் இருக்கும். அவர்கள் தமாஷாகக் காலங்கழிக்கப்போதிய காலம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

விடியற்காலத்தில் எழுந்து காலத்தை வீணாக்காமல் சரியான வழியில் உபயோகப்படுத்தும் வழக்கம் என் ஒருவனிடம் இருந்ததானது என்கீழ் வேலைசெய்த நூற்றுக் கணக்கான மனிதர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது மல்லாமல் வேலையையும் சரிவர ஒழுங்காக நடத்துவதற்கு அநுகூலமாகவு மிருந்தது —என்றார்.

A. Gopalaratnam.

## தாயைக்கொன்ற பெண்

பாரிஸ் நகரத்தில் அகஸ்டன் அகோக் என்னும் ஒரு பெண் தன் அன்னையுடனும் பதினுன்கு வயதுள்ள தங்கையுடனும் சில்லி என்னும் கிராமத்திலே வசித்து வந்தாள். அவள் தந்தை நிலச்சுவான்தாராக விருந்து இறந்துவிட்டார். ஆகவே அவர் சொத்து தாயாருக்குச் சொந்தமாயிற்று. ஒரு நாள் அகஸ்டன் என்னும் பெண், அந்தச் சொத்துக்களை யெல்லாம் தனக்குக் கொடுத்துவிடும்படி தன் அன்னையாகிய கிழவியைக் கேட்டாள். தாயார், "உனக்கொரு தங்கையிருக்கிருளல்லவா? அவளுக்கில்லாமல் உனக்கு மாத்திரம் எப்படி எல்லாச்சொத்தும் கிடைத்துவிடும்?" என்று கேட்டாள்.

பின் அகஸ்டன் சமயம் பார்த்துக்கொண்டிருந்து ஒரு நாள் இரவில் தன் அன்னையின் கழுத்தில் கயிற்றைச் சுருக்கிட்டு ஒரு தூலத்தில் அவளைத் தொங்க வைத்துவிட்டாள். அதனுல் பார்ப்பவர்கள் தாயாரே சுருக்கிட்டுக்கொண்டு இறந்து விட்டதாக நினைப்பாரென்பது அவள் கருத்து. மேலும் அவள் ஒரு கடிதத்தில் தன் தாய் எழுதிவைத்ததுபோல் ஒரு கடிதமெழுதி அதில், "நானே தற்கொலை செய்துகொண்டேன். யார்மீதும் குற்றம் சுமத்தவேண்டாம்" என்று குறிப்பிட்டிருந்தாள். அந்த அம்மாளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அது பக்கத்து வீட்டுக்காரருக்குத் தெரியுமாதலால் அதை யவர்கள் வெளியிட்டு விட்டார்கள். பரிசோதனையில் அந்த எழுத்தும் அப்பெண்ணினுடையதென்றே தெரிய வந்தது. அவள் கைது செய்யப்பட்டிருக்கிருளென்று தெரியவருகிறது.

அந்தோ! இது என்ன அநீதம்! தாயைக் கொலை செய்த மகளு மிருக்கிருளே உலகத்தில். பொருளை ஆட்கொல்லி யென்பது சரியா யிருக்கிறதே! பொருளின் நிமித்தமாக உலகத்தில் இப்படிப்பட்ட விபரீதங்கள் பல அடிக்கடி நடக்கின்றன. ஆகா! பொருளாசை கொடிது. இதனுலேதான், 'பொருளாசை கொண்டவர்க்கு யாராசையு மிராது' என்று கூறுகின்றனர் அநுபவமுடைய பெரியார்.

விவேகமுடைய அதாவது படித்துக் கல்வி ஞானமடைந்த மேலோரும் பொருளாசையினுல் மயக்கமுற்றுத் தகாதகாரியம் செய்கின்றனர். அப்படியிருக்க இந்த இளஞ்சிறுமி மயங்கியது ஆச்சரியமா? ஆச்சரியமல்லவாயினும் நம் நாட்டுச் சிறுமிகளுக்கு இப்படிப்பட்ட துணிவு உண்டாகாது. அங்கே இப்படிப் பொருளாசைபற்றிப் பல ஆபத்துக்களை ஜனங்கள் தமக்குள் விளைவித்துக் கொள்வது வழக்கமாயிருக்கிறது. அது சிறுவர்களுள்ளும் பரவியிருக்கிறது.

---

"அதிகச் சாராயம் குடிப்பதால் ஜனங்களுக்கு கபஜுரமும் க்ஷயரோகமும்வேறுபலநோய்களும் ஏற்படுகின்றன" என்று இங்கிலாந்தின் சுகாதார இலாகா பிரதம வைத்திய உத்தியோகஸ்தரான சர்ஜார்ஜ்நியூமன்என்பவர்கூறுகிறுர்.

## விநோத வழக்கங்கள்

ஆங்கிலேயர்கள் துக்கக்குறியி னடையாளமாகக் கையில் கறுப்புத்துணி கட்டிக்கொள்வதுபோல் சிட்கா என்னும் தேசத்திலுள்ள ஸ்திரீகள் புருஷனிறந்து விட்டால் அதற்கறிகுறியாக முகத்தின் மேற்பாகத்தில் கனமாகக் கறுப்பு வர்ணம் பூசிக்கொள்கிறார்களாம்.

நம் தேசத்தில் தங்கை அமங்கலையாவாளானால் அக்காள் ரவிக்கை போட்டுக் கொள்வதை நிறுத்தி விடுவது வழக்கமாயிருக்கிறது. இந்த வழக்கத்தை அநுசரித்த ஒரு மாதின் புருஷன், கோபங்கொண்டு "ரவிக்கையைமட்டும் களைந்தது போதாது; உன் தலையையும் மொட்டையடித்துக் கொள்" என்று கூறி அவளைப் பிடித்து இழுத்துத் தலைமயிரை முடிச்சோடு அறுத்து விட்டான். அதனால் கடுங்கோபமடைந்த அந்த மாது, அவன் படுத்த வேளை பார்த்து, "என் தலை மொட்டையான பிற்பாடு நீ இருப்பது நியாயமல்ல. செத்துப் போய்விடு"—என்று கூறி அவன் தலையில் அம்மிக்குழவியைப் போட்டு அவனைக் கொன்று விட்டாள். அப்பால் அவர்களிருவரையும் இந்தக் கூத்துக்குள்ளாக்கிய கோபம் "என்னுடைய வேலைத் தனத்தைப் பார்"—என்று மீசை முறுக்கி மார் தட்டியது. அப்போது—

"கோபஞ் செய்யாதிரு மனமே—இந்தக் கோபத்தால் கெட்டவர் கோடானு கோடி— (கோப)



என்று பாடிக்கொண்டு ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவன் பாடிய சத்தங்கேட்டதும்—யார் சத்தம் போடுவதங்கே—போ — சத்தம் போடாதே! — வீட்டில் விசேஷம்—என்ற ஒரு சத்தம் உண்டாயது. இதைக் கேட்டதும் பிச்சைக்காரன் "தினம் போடுகிறவனுக்குக் கூட இன்று கேடுவந்து விட்டதே!" என்று கூறிக் கொண்டே திரும்பினான். இந்த வார்த்தை வீட்டுக்காரனுடைய செவியிற்பட்டு விட்டது. அவன் உள்ளே இருந்து விரைவாக வந்து பிச்சைக்காரனைப் பார்த்து, "தினம் வாங்கிக்கொண்டு போகிற உனக்கு இந்தக் கோபமா?—நாளைய தினம் முதல் இந்த வாயிற்படியில் கால் வைத்தால் உன் காலை முறித்துவிடுவேன்—போ—நட" — என்று துரத்தினான்.

இப்போது கோபம்—"நான் இவ்வளவு தானா செய்வேன்—இன்னும் பல விபரீதம் செய்வேன்! என்னை ஜயிக்க யாராலுமாகாது—" என்று வீரம் பேசியது. அப்போது ஜனங்களை நோக்கி, ஞானத் தாயாராகிய ஔவையார்?—"ஆறுவது சினம்"--என்று போதித்தார். அவ்வம்மையாருடைய சகோதராகிய திருவள்ளுவர்—

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"

என்று போதித்தார். அதாவது, பூமியின் மேல் அறைந்தவனுடைய கை எப்படி தப்பாமல் அடிபட்டு வருந்துமோ அப்படியே கோபத்தைக் கொண்டவனும் கேடுறுவான்—என்று கூறினார்.

சோழ தேசத்தில் சாந்தி முகூர்த்தம் நடந்த மறுநாள், மாமியார் மருமகள் கையில் சாணிச்சட்டி கொடுத்துத் தெருவில் சாணிபோட்டுப் பெருக்கச் சொல்வது வழக்கம். அந்த வழக்கம் இப்போது கொஞ்ச காலமாகக் குறைந்துவருகிறது. சாந்தி முகூர்த்தத்தன்று—பிள்ளையைப் பெற்ற தாயார்—தம்பதியின் படுக்கையறையின் கதவண்டை உட்கார்ந்து அவர்கள் சம்பாஷணையைக் கவனிப்பது வழக்கம். இச்சமயத்தில் பெண்ணைப்பெற்ற தாயாருக்கும் அவளுக்கும் சண்டையுண்டாவது வழக்கம்.

நம் நாட்டில் ஒரு சமயம் இப்படி யிருவருக்கும் சண்டை யுண்டாயிற்று. அதனால் படுக்கை யறையிலிருந்த மகன்கோபங்கொண்டு வெறியனைப்போல் எழுந்து வந்து அவர்களிருவரையும் ஓர் அறையிலே தள்ளி அடைத்துக் கதவைத்தாளிட்டுக் கொண்டு தான் நித்திரைக்குப் போனான். பின் கூச்சலடங்கியது. அந்த அறையில் சம்பந்திகளிருவரும் என்ன செய்தார்களோ தெரியவில்லை. அவர்களுக்குள் மௌனம் குடிகொண்டிருந்திருக்குமென்று நாம் நம்புகிறோம்.

யார் வீட்டிலாவது பெரிய வயதானவர்களாரேனும் இறந்து விட்டால் அப்பொழுது ஸ்திரீகளெல்லோரும் கூடிச்சூழ உட்கார்ந்து கொண்டு ஒப்பாரி வைத்து அழுவது வழக்கமாயிருக்கிறது. அப்பொழுது சில சமயங்களில் சில ஸ்திரீகளுக்கு அழுகை வருவதில்லை. அவர்கள்—சிரிப்பையே அழுகை போலாக்கிக் கொண்டு ஒப்பாரி வைப்பதுண்டு.



இந்த வழக்கத்தை ஒரு மங்கை தன் மாமியார் இறந்து போனபோது செய்தாள். அதை யறிந்த அவள் புருஷன்—அவளைத் தனிப்பட அழைத்து "உன் மாமியார் இறந்து கிடக்கையில் அழாமல் சிரிப்பது சரியா?—ஊரார் கண்டால் என்ன நினைப்பார்கள்?"—என்று கேட்டான்.

அவள், "மாமியார் இறந்து போனாளென்று உண்மையில் துக்கப்படுகிற மருமகளைக் காண்பதரிது. மருமகளிறந்து போய் உண்மையாய்த் துக்கப்படுகிற மாமியையும் காண்பதரிது. மாமியார் இறந்து போனதில் எனக்கு உண்மையில் துக்கமுண்டாகவில்லை. துக்கமடைந்தவளைப் போல் பாசாங்குசெய்ய எனக்கு மனம் வரவில்லை. அதனால் சிரிப்பில் ஒப்பாரி பாடினேன்" என்றாள். இதைக் கேட்டதும் அவன் தன் மனைவி தன்னிடம் உண்மை பேசியதற்காக மகிழ்ந்தான்.

(பாலசரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்)

---

## ஒரே நாளில் 300 வகை தேயிலைப்பானம்

லண்டனில் மிஸ். மார்கரட் இர்வின் என்ற மாது இருக்கிறார். அவருக்குப் பல வகையான தேயிலைகளையும் ருசி பார்த்து அதனதன் தராதரங்களை அறிவிப்பதே வேலையாகும். அவர் தினசரி 300 வகை தேயிலைகளைப் பானம் செய்து பார்த்து அவற்றின் தாரதம்மியங்களைப் பற்றி அறிவிக்கிறார். மூன்று வருஷ காலம் அவரிடம் பயிற்சி பெற்றால் பிறரும் அவ்வாறு சமர்த்தர்களாகலாம் என்பது அவர் கருத்து.

# பெண்ணாசை கொண்டவரின் கதி

1. இராவணன் ஸீதையை அடைய ஆசைப்பட்டுக் குடும்பத்துடன் அழிந்தான்.

2. கீசகன் பாஞ்சாலியை அடைய ஆசைப்பட்டுத் தானிறந்தது மல்லாமல் தன் சகோதரர் பலரையும் பீமசேனனுடைய குத்துக் கிரையாக்கினான்.

3. நகுஷன் என்பவன் தேவேந்த்ர பதவியை அடைந்தபின், இந்திராணியின் பேரில் ஆசைப்பட்டு, மகரிஷிகளுக்குக் கோபம் வர நடந்து மலைப்பாம்பானான்.

4. விசுவாமித்திரர் மேனகையின் மேல் ஆசைப்பட்டுத் தவத்தை இழந்தார்.

5. இந்திரன் அகலிகையினிடம் ஆசை கொண்டு உடம்பு முழுவதும் பெண்குறியை அடைந்து அவமானப்பட்டான்.

6. சுந்தோப சுந்தரர்—என்னும் அண்ணன் தம்பிகள்—பெண்ணின்பேரி லாசைப்பட்டுச் சச்சரவு செய்து ஒருவரை யொருவர் குத்திக் கொண்டு இறந்தனர்.

7. ஜயத்ரதன் என்பவன் பாஞ்சாலியை இச்சித்தெடுத்துப் பாண்டவரிடம் கட்டுண்டு—ஐங் குடுமியும் உடம்பில் செம்புள்ளி கரும்புள்ளியும் வைக்கப்பட்டு அவமான மடைந்தான்.

# ஆசார வீனன்

ஓர் ஊரில் எல்லோரும் ஆசார சீலராக இருந்தனர். அவர்களெல்லோரும் அதிகாலையி லெழுந்து நதிக்குச் சென்று நீராடித் தூய ஆடை யுடுத்து ஜபதபங்கள் செய்வது வழக்கம். அந்த ஊருக்கு ஆசார வீனனொருவன் போய்ச் சேர்ந்தான். அவ்வூரிலிருந்த அவனுடைய உறவினர், "அப்பா இவ்வூரில் எல்லோரும் ஆசார சீலர்கள். நாமும் அவர்களைப் போல் ஆசாரமுடையவர்களா யிருந்தா லன்றி மரியாதை கிடைக்காது. நீ இவ்வூரிலிருக்கிற வரையில் ஆசாரங்கள் தவறி நடவாதே! தவறுவாயானால் உன் உறவினராகிய எங்கட்கும் அவமான முண்டாகும்" என்று புத்தி கூறினார்கள்.

ஆசார வீனனுக்கு அவர்கள் கூறிய புத்திமதி மனதிற் படவில்லை. அவன் தன் வழக்கப்படியே இருந்து வந்தான். அவன் அவ்வூர் போய் ஒரு வாரம் வரையில் வெளியே வரவே இல்லை. பின் ஒரு நாள் நதிக்கு நீராடச் சென்று ஆசார சீலர்கள் நீராடும் துறையி லிறங்கி இடையில் உடுத்திருந்த ஆடையை அவிழ்த்துக் கரையின் மேல் வைத்து விட்டு மேல் வஸ்திரத்தை உடுத்துக் கொண்டு நதியில் கழுத்தளவு குளித்தெழுந்தான்; எழுந்ததும் வேகமாய்ச் சென்று தான் அவிழ்த்து வைத்த தன் இடுப்புத் துணியையெடுத்து உடம்பு துடைத்துக் கொண்டு அதையே

உடுத்து மேல் வஸ்திரத்தைக் கசக்க நதியிலிறங்கினான்.

அது கண்ட ஆசார சீலர்கள்! "யாரப்பா நீ துணியைக் கசக்காதே! மேலே ஜலம் தெளிக்கும். நீ ஸ்நானம் செய்யவில்லை. உலர்ந்த வஸ்திர முடுத்தவுமில்லை. நேற்றுக் கட்டி யிருந்த ஆடையையே உடுத்துக்கொண்டிருக்கிறாய். இப்படிப்பட்ட ஆசாரம் இந்த ஊரில் உதவாது. துணி கசக்க விருப்பமானால் வேறு துறைக்குப் போய் உன்னிஷ்டப்படி நட" என்றார்கள்.

ஆசார வீனன், அவர்களை மீறி நடக்க அஞ்சினான்; தன்னுடைய உறவினர் கூறியபடி ஒப்புரவொழுகுவதை விட்டு மனம் போனபடி நடந்தது தவறென்பதை உணர்ந்தான்; பின் அத்துறையை விட்டு நீங்கி வேறு துறைக்குப் போய்த் துணி கசக்கிக் கொண்டு வீடு திரும்பினான். அவனுக்குத் துணையாக அவமானம் அவன் கூடவே சென்று அவனைக் குனிந்த தலை நிமிர வொட்டாமல் கீழே பார்த்தபடியே நடக்க வைத்து வெகு ஜாக்ரதையாய் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது.

## சமுத்திரத்தைக் கடந்த பறவை

கடல் சாக்கை போன்ற ஒரு பறவை ஐரோப்பாவிலிருந்து அத்லாண்டிக் சமுத்ரத்தைக் கடந்து அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறது. பாஸடன் என்னும் நகருக்கருகில் அப்பறவை இருந்தது, அதைப் பிடித்து மியூசியத்தில் வைத்திருக்கிறார்கள்.

## இன்னொருவர்க்கு இட்டுப் புசிக்கும் போஜனமே சிறந்த தென்பது.

திருக்கோவலூரில் அங்கவை, சங்கவை யென்னும் யாதவப் பெண்க ளிருவர் இருந்தார்கள்; மிகவும் ஏழை; தரும குணம் பொருந்தியவர்கள். தாங்களுண்பது ஏழைச் சாப்பாடானாலும் அதிற் கொஞ்சம் பிறருக்கிட்டே சாப்பிடுவார்கள். இவர்களிருக்கும் குடிசையின் பக்கமாய் ஒரு சமயம் ஔவை போய்க் கொண்டிருந்தாள். அப்போது மழை பெய்து கொண்டிருந்தது. அந்த மழையில் நனைந்தபடியே செல்லும் ஔவையை இப் பெண்கள் கண்டார்கள். "ஐயோ, யாரோ ஒரு தள்ளாத கிழவி இந்த மழையில் நனைந்து கொண்டே நடுநடுங்கிய வண்ணம் போகின்றாளே; திக்கில்லாதவள் போல் காணப்படுகிறாள். இப்படி வழி நடப்பவர் யாராயிருந்தால் தான் என்ன? நாம் பார்த்தும் பராமுகமாயிருப்பது அழகா? நம்மாலான சகாயம் செய்வது நல்லதல்லவா?" என்றெண்ணி, ஓடிச் சென்று ஔவையைக் கைப்பிடியாய்ப் பிடித்து, தங்கள் குடிசைக்குள் அழைத்து வந்து "ஐயோ, ஆயா, ஏன் இந்த மழையில் நீ தேகம் சிலிர்க்க நடந்து வரவேண்டும்; எங்காகிலும் மழை நிற்கு மட்டும் தங்கலாகாதா? நீ கட்டிக் கொண்டிருக்கும் புடவை முழுதும் நனைந்து போயிருக்கிறதே" என்று சொல்லி அவளாடையை அவிழ்

த்து உலர வைத்து வேறோராடை கொடுத்து, தீமூட்டி, அதில் குளிர் காயச் செய்து தங்களிடமுள்ள கூழை உண்ணக் கொடுத்தார்கள்.

ஔவை உண்டு மனங் குளிர்ந்தாள்; சற்று இளைப்பாறினாள். பிறகு முகமறியாத நம்மை இப்பெண்கள் அன்போடு உபசரித்தார்களே! இப்படிப்பட்ட உத்தம குணங்கள் பெண்களுக் கமைவது அரிது. இவர்களுக்கு நாம் ஏதேனும் நன்மை செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, அவர்களுக்குத் தக்க கணவன்மாரைத் தேடி, சேர, சோழ, பாண்டிய ராஜாக்களை வரவழைத்து, சிறப்பாக ஆடையாபரணங்களுதவி, திருமணம் புரிவித்தாள்; தானே முதலாக நின்று ஆசீர்வதித்தாள்; நல்ல அந்தஸ்தில வாழும்படி அநுக்கிரகித்தாள்.

ஏழைப் பெண்களுக்கு இத்தன்மையான உயர்வு எதனால் வந்தது? ஒரு வேளை அன்னம் முன் பின் அறியாத ஒரு கிழவிக்கு இட்டதினாலன்றோ? அன்னதான பலன் வீண் போமா? இதுபற்றியே நாம் உண்ணப் போகும் அன்னம் கிடைப்பதற்கு அருமையான தேவாமிர்தமாயிருந்தாலுஞ் சரி, கேவலமான கூழாயிருந்தாலுஞ் சரி, அதில் சிறிது பிறருக்கிட்டுப் புசிக்கும்படி பெரியோர்கள் கட்டளையிட்டிருக்கின்றனர்; அப்படி இட்டுண்பது தான் உண்டிக் கழகாகும். அதுபற்றியே "உண்டிக்கழகு விருந்தோடுண்ணல்" என்று கூறலாயிற்று.

1. ஐய மிட்டுண்.
2. மருந்தே யாயினும் விருந்தோடுண்.
3. வித்துமிடல் வேண்டுங் கொல்லோ
விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்

# அதிக ஆசை அதிக நஷ்டம்

(284-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய பணக்காரனான முத்தையனை நித்திரையில் விட்டு விட்டு வந்தோமல்லவா! அதிகக் களைப்பினாலும் இரவு வெகு நேரம் தூக்கம் விழித்துக் கொண்டிருந்தபடியினாலும் தன்னை யறியாமல் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த முத்தையன், புதையல் ஞாபகமே மனதில் குடிகொண்டிருந்தபடியால் திடீரென்று விழித்துக்கொண்டு விளக்கேற்றிப் புதையல வைத்திருந்த இடத்தைப் பார்த்தான். மணல் சரிந்திருந்தது; புதையலைக் காணோம். மனந் திடுக்கிட்டான். விளக்கின் திரியை இழுத்துப் பெரிதாகச் செய்து உற்றுநோக்கினான்; சுவற்றில் பெரிய துவாரம் செய்திருக்கக் கண்டான். "ஆ! மோசம் போனோமே" என்று முகத்தில் அறைந்துகொண்டான். "பாழும் தூக்கம் நம்மைப் புதையலை இழக்கும்படி செய்துவிட்டதே. நாம் புதையல் எடுத்து வந்த செய்தி தெரிந்து யாரோ திருடர்கள் கன்னமிட்டுப் புதையலைக் களவாடிப் போயிருக்கிறார்கள். நாம் காலதாமதம் செய்யாமல் திருடர்கள் காலடி போயிருக்கும் வழியே போய் அவர்களைக் கண்டுபிடித்துப் புதையலைத் திரும்ப அடையவேண்டும்" என்று தீர்மானித்தான். உடனே பிச்சுவா (ஒருவகைக் கத்தி)வை

எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு ஒரு கையில் குண்டாந்தடியுடனும் மற்றொரு கையில் விளக்குடனும் புறப்பட்டான். விளக்கு வெளிச்சத்தின் உதவியால் பக்கத்துவீட்டுப் புறக்கடையில் திருடர்கள் காலடிகளைக் கண்டு அதன் வழியே நடந்தான். கொஞ்சதூரம் போனதும் வயல் வெளியில் காலடிகள் மறைந்துவிட்டன. ஆனால் வீட்டை விட்டுப் புறப்பட்டது முதல் அக்காலடிகளின் வழியே நிலக்கடலைத் தோல்கள் உதிர்ந்துகிடந்தன. அதனால் திருடர்கள் நிலக்கடலை தின்றுகொண்டு போயிருக்கிறார்கள்'' என்று யோசித்து அவன் அதன் வழியே சென்றான். அது திருடர்களும் காடனும் பிரிந்த இடத்திற்குக் கொண்டு போய் விட்டது. அதற்கப்பால் தோலைக்காணோம். அவன் சற்று அங்குமிங்கும் தேடினான்; பாட்டையில் நாலைந்துபேர் குத்துண்டு மூர்ச்சையா யிருப்பதைக் கண்டான். "இவர்கள் தான் திருடரா யிருக்கவேண்டும், இவர்களைக் குத்திக் கொன்றுவிட்டுப் புதையலை யாரோ அபகரித்துக்கொண்டு போயிருக்க வேண்டும். இரத்த வெள்ளம் பெருகிக்கொண்டிருக்கிறபடியால் இப்போது தான் இச்சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆகையால் புதையலை யடித்துக்கொண்டு போனவர்கள் சமீபத்தில் தான் போகவேண்டும். இதோ போய்க் கண்டு பிடிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டு கொஞ்ச தூரம் போய்ச் சுற்றுமுற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவன் கண்ணுக்கு ஓர் உருவம் தெரிந்தது. மெதுவாக



சற்றுக் கிட்டியதும் அவ்வுருவத்தின் தலையில் ஒரு மூட்டை யிருப்பதும் தெரிந்தது; அதுதான் புதையல் என்றும் அவன்தான் திருடன் என்றும் தீர்மானித்தான்; உடனே சந்தடி செய்யாமல் வேறு வழியாக ஓடி அவ்வுருவம் வரும் வழியிலிருந்த ஒரு புதரில் ஒளிந்துகொண்டான். அவ்வுருவம் அதைத் தாண்டியதும் குபீலென்று பாய்ந்து தன் கைக்குண்டாந் தடியால் அவ்வுருவத்தின் பின்பக்கத்துக் குதிகால் நரம்பில் ஒருதாக்குத் தாக்கினான். அவ்வுருவம் "ஐயோ" வென்றலறிக்கொண்டு தலை மூட்டையுடன் கீழே விழுந்தது. உடனே முத்தையன் மடியிலிருந்த பிச்சுவாவை யுருவி அவ்வுருவத்தின் முதுகில் ஒரு குத்துக் குத்தினான். உருவம் மூர்ச்சித்தது. புதையலிலேயே திருஷ்டியாக விருந்த முத்தையன் மூட்டையை எடுத்து அவிழ்த்துப் பார்க்க அதில் தான் பறிகொடுத்த புதையலே யிருக்கக் கண்டு ஆநந்த சாகரத்தில் மூழ்கினான். கேட்கவேண்டுமா முத்தையன் இப்போது அடைந்துள்ள சந்தோஷத்திற்கு!

முத்தையனிடம் இப்போது அகப்பட்டுள்ளது புதையலாகையால் அடிபட்டுக் குத்துண்டு மூர்ச்சித்து விழுந்திருப்பது சற்று முன் மனோபாவத்தில் திருடர்கோனாக விருந்த காடன் என்பது சொல்லாமலே விளங்கும். முத்தையன் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவனா யிருந்தபோதிலும் ஒருவருமறியாமல் விடியுமுன் புதையலை வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்கிற அவசரம் அவனைத் தாண்டியபடி

யால் காலதாமதம் செய்யாமல் முத்தையன் புதையலுடன் குறுக்குவழியே தன்வீடு நோக்கிச் சென்றான். போகும்போதே சின்னப்பண்ணை பெரியபண்ணை பிரயோசனமில்லை. பாளையப்பட்டு ஜமீனை வாங்குவதற்குக்கூட நம்மிடம் பணமிருக்கிறது. ஆகையால் அந்த ஜமீனைத்தான் வாங்கவேண்டும். இதைத் தூக்கிக்கொண்டு போகும் கஷ்டமெல்லாம் வீடுபோகும் வரையில்தானே? பிறகு நாம்தான் ஜமீன்தார். "ஓ! ஜமீன்தார்" என்று நினைத்து மகிழ்ந்தான். உத்தர க்ஷணத்திலேயே "ஐயோ செத்தேன்" என்று அலறிக்கொண்டே விழுந்தான். ஜமீன்தாராகிய முத்தையன் இப்படித் திடீரென விழக்காரணமென்னவென்று வாசகர்கள் யோசிக்கக் கூடும். அவனை ஒரு கருநாகம் தீண்டிவிட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் விஷம் தலைக்கேறி உயிர் துறந்தான் முத்தையன். புதையலும் கீழே விழுந்தது.

வாசகர்களே! "பணம் பல செய்யும்" என்பது பழமொழியல்லவா? அதற்கேற்ப நம்முடைய புதையல் குமரேசனை ஏமாற்றிய முத்தையனை முதலில் சீமானாக்கித் திருடர் வசமகப்படும்படி செய்தது; பிறகு காடனைத் திருடர் கோனாக்கி, மறுபடியும் முத்தையனை ஜமீன்தாராகச் செய்து இப்போது கொடுத்துவைத்தவன் யாரோ அவன் தன்னை எடுத்துக் கொள்ளட்டுமென்று பகிரங்கமான இடத்தில் கிடக்கிறது. கொடுத்து வைத்தவன் யாரென்று கவனிப்போம்.

வரும்.

ஏ. கோபால ரத்தினம்.

## சுத்தமே சுகத்திற்கு ஆதாரம்

"தெள்ளுப் பூச்சிகளும் கொசுக்களும் நோய்க் கிருமிகளை நம்முட் செலுத்தி நமக்குத் தீங்கு செய்கின்றன. கொசுக்களே மலேரியா என்னும் விஷ ஜுரத்திற்கும் முடக்கு ஜுரம் முதலியவற்றிற்கும் காரணம். தெள்ளுப்பூச்சி மகமாரி யென்னும் பிளேக் நோயைப் பரவச்செய்கிறது. மூட்டுப்பூச்சிகளும் பேன்களுங் கூடச் சில நோய்களுக்குக் காரணம். ஆகையினால் இவைகள் வீட்டிற் சேரவொட்டாமற் காத்துக் கொள்ளவேண்டும்"—என்று வைத்திய சாஸ்திர நிபுணர் கூறுகின்றனர். இதற்கு நாமொரு மருந்து கூறுகின்றோம். பிள்ளைகளே! கண்கள் சுத்தமாயிருந்தால் ஈயாவது கொசுவாவது நம்மை யண்டுவதில்லை. ஈயும் கொசுவும்—பீளையுடைய கண்களிலும் சிரங்குடைய உடலிலுமே மொய்க்கின்றன. மூட்டுப் பூச்சியும் தெள்ளுப் பூச்சியும் சுத்தமாய் அழுக்கு, குப்பை, சேறு, ஈரம் முதலியவைகளில்லாத வீட்டில் வருவதில்லை. ஆகையினால் நாம் சுத்தமாயிருக்கவும் வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவும் போதுமான கவலை யெடுத்துக்கொண்டு நாடோறும் ஆசாரங்களைச் சரிவர அனுஷ்டித்து வரவேண்டும். வருவோமானால் இந்த அற்ப பூச்சிகள் நம்மை என்ன செய்யும்?

சிலர் எலியினால் பிளேக் நோய் பரவுகிறதென்று கூறுகின்றனர். எலியும் பண்டங்களை மூடிப் பாதுகாக்கப்படும் சுத்தமான வீட்டிற் பிரவேசிப்பதில்லை. ஆதலால் சுத்தமே சுகத்துக்கு ஆதாரமாகும்.

---

Filth is the mother of Sickness and death
Cleanliness is the mother of health
and long life.

## விகடப்பா

### திறள்.

(1) தின்றதனால் ஆயபயனென்கொல் எப்பந்தான்
நன்றுவராஅ தெனின்

(2) பயற்றம்பருப் புருண்டை பத்தெட்டுத்தின்றால்
வயிற்றுவலி மாற்றலரிது

(3) நீதியெனப் படுவதியாதெனின் யாதொன்றும்
மீதியிலாது கொளல்

(4) பாராதாரில்லாத போழ்து சர்க்கார்வேலை
பார்ப்பார்க்கும் ஈயப்படும்

(5) பெறுமவற்றுள் யாமறிவதில்லை; உறுபொழுதில்
காபிடீ யல்லபிற

(பஞ்சாமிர்தம்.)

---

## (4) முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

இராகம்—கல்யாணி ஜம்பை—தாளம்.

### பல்லவி

தீர்த்த முதல் மூர்த்தியுந் தலவிசேஷமுமெங்கள்
சிவசிதம்பரத்திற்றானே

### அநுபல்லவி

கீர்த்தனஞ் செய்யுமெய்ப் பொருண் மூன்றுமொ
[ன்றென்று
கேண்மையோடு வேதாகமம்—பகருமாகையால் (தீர்)

### சரணங்கள்

1 தெரிசித்த போதிந்த—பிரமனெக்காளும்
செலுத்தும் பாக்கியங்களுண்டாம்
பரிசித்த போதுலகு பதினாலும் ரக்ஷிக்கும்
பதுமவிழியோனாகலாம்
உருசிக்கும் பானீயம் அன்பாக வுட்கொள்ளின்
உருத்திரன் பதவிபெறலாம்
வருசிற்பரா நந்தத்தீர்த்த மதிலாடவே
மகேசுவரனுமே யாகலாம் (தீர்)

2 கல்லுமுதன்மணல்களும் துகள்களும் லிங்க
மெனக்
கருதும் வேதங்களெல்லாம்
தில்லை தலத்துளுண்டான குளம்படியின் நீரெ
[லாம்

சிவகங்கை யென்று சொல்லலாம்
குல்லைமாறி புகழுரிய கூபங்களாநந்தக்
கூபமென்றே பகரலாம்
வல்ல நடராஜர் பதங்காணுமலே தலத்தில்
வசித்தவரு முத்தி பெறலாம் (தீர்)

3 சிந்தைமகிழ் சம்பந்தர் தரிசிக்க யாவரும்
சிவசொரூபமான திறமும்
நந்திமுதலிந்திரர் மூவாயிரம் புனிதரும்
நாரணருந் தொழுதேத்தவே
வந்துதெரிசித்தவர்க்கு மாறாதபேரின்ப வாழ்வு
தருகின்றபதமும்
கந்தமுறுகோதைச் சிவகாமிபங்கில் நடனமிடு
கடவுளருள் வடிவாகையால் (தீர்)

---

## கண்ணுள்ள மரங்கள்.

பறவைகட் குள்ளதே போன்ற உணர்ச்சி மரங்கட்கு முண்டு. எவ்வாறெனின் தோட்டங்களிலோ நந்தவனங்களிலோ பூமிக்கடியிலுள்ள குழாய்களில் உடைப் பேற்பட்டால் அடுத்துள்ள மரம் உடனே தன் வேரை நீட்டி அந்த உடைப்பினுள் செலுத்தப்பார்க்கும். இதைவிட உஷ்ணப் பிரதேசங்களில் உள்ள கொடி போன்றுபடரும் ஒருவகைப் பிரம்புச் செடி யானது ஒரு மரத்தின் மீது தொத்தி உச்சிவரை போய் அதற்கு மேல் வழியில்லை யென்பதை யுணர்ந்து மீண்டும் கீழிறங்கிப் படர்ந்து இன்னொரு மரம் 50 அடி தூரத்திலிருந்தபோதிலும் அம்மரத்துக்கு; ஒரு நாளைக்கு ஒரு அடி வீதம் வளர்ந்து அம்மரத்திலே தொத்திக் கொள்கிறது.

## நடராஜப் பத்து

(முன் தொடர்ச்சி)

அன்னை தந்தைகளென்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் றன்னையே நோவனோ
ஆசை மூன்றுக்கழுவனோ
முன்பிறப் பென்னவினை மூளுமென் றழுவனோ
முத்திவரு மென்றுணர்வனோ
தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க்கழுவனோ தவறிடர்க்கழுவனோ
தரித்திரத்திற் கழுவனோ
இன்னமெப்பிறவி வருமோவென வழுவனோ
எல்லாமுணர்த்த வருவாய்
ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே (7)

காயாமுன் மரமீது பூப்பிஞ்சறுத்தனோ
கன்னியர்தம் பழிகொண்டனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக்கென்னவினை செய்தனோ
தந்தபொருளில்லை யென்றனோ
தானென்று கர்வித்துக் கொலைகளவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ

வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்
தேனோ
வாணரைப் பழித்திட்டேனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்காதடித்தேனோ
வந்தபின் என் செய்தேனோ
ஈயாதலோபி யென்றே பெயரெடுத்தேனோ
எல்லாம் பொறுத் தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே (8)

(வரும்)

---

(1) பிறர்குணம் பேசு-பெருமை பெறுவாய்
(2) பிறர்துயர்க்கிரங்கு-பெருமை பெறுவாய்
(3) பிறர்க்கிதம் விரும்பு-பெருமை பெறுவாய்
(4) பிறர்பிழை மறந்திடு-பெருமை பெறுவாய்

## பஞ்சுக் கட்டை

ஐரோப்பாவில் பஞ்சை நன்றாக நசுக்கிக் கெட்டிப் படுத்தி அதிலிருந்து ஒரு விதமான மரம் செய்யப் படுகின்றது. இம் மரமானது இதர மரங்களை ஒத்திருக்கும். இதர மரங்களை அறுத்துச் செதுக்கி ஆணி யடித்து மரச்சாமான்களைச் செய்வது போன்று இம்மரத்தைக் கொண்டும் செய்யலாம். இதற்கு எந்த வர்ணம் கொடுத்தாலும் பிடிக்கும். நெருப்பில் குபீரென்று பற்றி யெரிந்தோ அன்றி ஈரத்தில் நனைந்தோ போகாது. இதனால் மரச் சாமான்களின் விலை குறையும்.

## குடியினால் விளையும் கேடு

(லோகோபகாரி)

### நாம் செய்ய வேண்டிய கடமை

குடியாதவர்களைவிடக் குடிகாரர்களே அதிகமாக விபத்துக் காளாகின்றனர். குடிகாரர்களின் காயங்களைக் காட்டிலும், குடியாதவர்களது காயங்கள், விரைவில் சொஸ்தமாகின்றன. குடியாதவர்கள் சிகித்சையின் பொருட்டு, ஆஸ்பத்திரியில் ஒரு தின மிருக்க நேரிட்டால், குடிகாரர்கள் அதே தன்மையான காயத்திற்கு நான்கு தினங்களிருக்க நேரிடுகின்றது. ஏனெனில், ஒடிந்த எலும்பு சேருவதற்கும், காயம் ஆறுவதற்கும், மதுஸாரம் பெருந் தடையா யிருக்கின்றது. மதுஸாரமானது, உடலிலுள்ள உயிர் அணுக்கள், தசைநார்கள் முதலியவற்றைப் பலவீனப்படுத்துகின்றது. குடிவெறியி லிருப்பவனுக்குச் சில வகையான காயங்கள் ஏற்படின், அவனது மயக்கந் தீரும் வரையில், அக்காயத்தி னியல்பை வைத்தியர்கள் அறிந்து கொள்ள இயலாது. ஒருவன் விஷத்தை உட்கொண்டிருப்பினும், மது மயக்க மிருக்கும்போது, அதைக் கண்டு பிடித்து சிகித்சை செய்யவும் முடியாது. அதனாலேற்படுந் தாமதமானது, உயிருக்கே அபாயமாகின்றது. உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர் பிரிக்ஸி என்பவரும் "காயங்களினால மரணமடைவோரில், குடிகாரர்கள்தா னதிகம்" என்று எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.

கூலி வேலை செய்பவர்களும், நாள் முழுதும் கடினவேலை செய்பவர்களும், தங்களுடைய சிரமமானது, குடிப்பதனால் சிறிது குறைவதாக எண்ணுகின்றனர். அது ஒருவித போதையைத் தருவதால், அவர்களவ்வாறு நினைக்க இடமேற்படுகின்றது. குடிப்பதனால் நரம்புகள் தளர்ந்து, மிகுந்த பலவீனமே ஏற்படுகின்றது. சிரமம் அதிகரிக்கின்றதேயன்றிச் சிறிதுங் குறைவதில்லை. சாராயங் குடிப்பதனால், தேகத்தில் உஷ்ணம் ஏற்படும் என்று சிலர் தப்பபிப்பிராயப் படுகின்றனர். சாராயத்தில் உள்ள மதுஸாரமானது, இரத்த ஓட்டத்தைக் காக்கும் நரம்புகளைப் பலவீனப் படுத்தி, அளவுக்கு மிஞ்சிய இரத்தம் மேல் தோலுக்கு வரச் செய்வதால், அவ்வாறு உஷ்ணம் ஏற்படுவதாகத் தோன்றுகின்றதேயொழிய, வெகு சீக்கிரத்தில், அந்த இரத்த வெப்பமானது தணிந்து, குளிரைத்தான் தருகின்றது.

## போலி விளம்பரங்கள்.

சில வியாபாரிகள் வியாதிகளுக்கேற்ற மருந்தெனவும், தேகத்துக்குப் புஷ்டியைத் தரத்தக்கதென்றும், இழந்துபோன பலத்தை மீட்டுக் கொடுக்கக்கூடியதென்றும், நல்ல டானிக்கென்றும், இரத்தவிருத்திக்கேற்றதென்றும், பொய்யான விளயபரங்கள் செய்து, பணம் பறிக்கின்றனர். அத்தகைய போலி விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து போகின்றவர்களோ அநேகர். தேக பலத்தைக் கொடுப்பதாகவும், உயிரைக் கொடுப்பதாகவும், எண்ணி உபயோகிக்கின்றவர்கள் தாங்களெண்ணியதற்கு முற்றும் மாறாக, அகால மரணங்களுக்காளாவதை, நாம் பிரத்தியக்ஷமாகக் காணலாம்.



## குடியிலும் மிதமா?

ஆயினும் சிலர் தாங்கள் மிதமாகக் குடிப்பதாகவும், அதனால் தங்களுக்கு நஷ்டமெதுவு மேற்படாதென்றும் கருதுகின்றனர். குடியாதவர்கள், சேர்க்கை தோஷத்தினால், தற்போது மிதமாகக் குடிக்க ஆரம்பித்தாலும், நாளடைவில் ஓயாக்குடியர்களாகின்றனர். [கையில் உஸ்கி பாட்டிலை எடுத்து விட்டால், அதில் மூடியுள்ள கார்க்கையு மெடுக்க அவகாசமேற்படுவதில்லை. அப்படியே மேஜையின் பலகையில், கழுத்தளவில் பாட்டிலைத் தட்டி விட்டுக் கடகடவென்று சாப்பிட்டு ஏப்பம் விடுகின்றனர்.] பரமயோக்கியர்களாயிருப்பவர்களும், ஆரம்பத்தில் குடிகாரர்களோடு சேர்ந்திருப்பதும், வேடிக்கையார்த்தமாகவும் மருந்துக்காகவும் சிறிது குடிப்பதும், பிறகு கொஞ்சம் மறைவாகக் குடிக்க ஆரம்பிப்பதும், அதே அப்பியாசமானது, கடைசியில் கள்ளுக்கடைக்கும், சாராயக் கடைக்கும் ஆயுளை அர்ப்பணம் செய்துவிடு மென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. மிதமாகக் குடிப்பதனால், புத்தி முழுதுங் கெட்டுப்போகா விடினும், அவ்வாறு மிதமாக உபயோகித்து வரும் கொடிய விஷமாகிய மதுஸாரமானது, தேகத்தையும் அறிவையும் அவனறியாமலே நாளடைவில் கெடுத்துப் பாழாக்கி விடுகின்றது. மிதமாகக் குடிப்பவன், ஆரம்பத்தில் சிறிது இன்பம் அனுபவிப்பதாக நினைத்தாலும், நாளடைவில் பழக்கத்தினால், அது சர்வ சாதாரணமாகப் போய் விடுவதனால், இன்ப மனுபவிக்க முடியாதவனாகி, மேலும் மேலும்

அதிகமாகக் குடித்து இன்ப மனுபவிக்க எண்ணி ஏமாந்து போகின்றான். அதனால் மிதக் குடியானது அமிதக் குடி யாகின்றது. மேலும் மிதமிஞ்சிக் குடிப்பவனைவிட, மிதமாகக் குடிப்பவனாலேயே, கெடுதிகள் பல விளையும். எவ்வாறெனில் மிதமிஞ்சிக் குடிப்பவன் தன்னுடைய நிலைமை தவறி, நடப்பதற்கும் முடியாதவனாகி, எந்த வேலை செய்வதற்கும் அசக்தனாகி, பிரக்ஞையற்று, ஓரிடத்தில் விழுந்து விடுகின்றான். அவனது மயக்கந்தீர அதிக நேரமாகின்றபடியால, அவனால் யாருக்கும் இடைஞ்சல் ஏற்படாது. நடுரஸ்தாவில் அவன் விழுந்து கிடப்பினும், பிரயாணிகள், அவன் குடித்து விட்டுக் கிடக்கின்றானென்பது தெரிந்து, போய் விடுவார்கள். அரைக்குடியா யிருப்பவனோ, தனது மது வெறியினால் பல அட்டூழியங்கள் செய்யத் துணிகின்றான். ஆதலால் மிதமாகக் குடிப்பதோ, மருந்துக்காகச் சிறிது குடிப்பதோ, தேக பலத்துக்காகக் குடிப்பதோ, யாவுங் கெடுதலாகவே முடியும்.

## குடியை யொழித்த நாடுகளின் முன்னேற்றம்

உலகத்திலே, மற்றெல்லா தேசங்களையும் விட மிகவும் மேலான நிலைமையிலிருப்பது அமெரிக்காவே. ஏனெனில், அங்குள்ளவர்கள் தங்கள் வருமானத்தை, நம்போல குடி வகையில் செலவழிக்காமல், அதிகமாக மீத்து வைக்கின்றனர். அங்கு மதுவிலக்குச் சட்டம் நிறைவேறியதன் பயனாக, கள்ளு, சாராயக் கடைகள் கிடையா. கூலிபெறும் தொழிலாளர்கள், தாங்கள் மிகுக்கக் கூடிய சிறு தொகையையும், பாங்கியில்



சேர்த்து வைக்கின்றனர். நமது நாட்டிலோ தொழிலாளர்கள், சம்பள பட்டுவாடா தினங்களில் நேரே கள்ளு, சாராயக் கடைக்குச் சென்று, செலவழிக்கின்றனர். அன்று, மற்ற எல்லாக் கடைகளையும் விட, கள்ளு சாராயக் கடைகளில் தான், அதிக வியாபாரம் நடக்கின்றது. அமெரிக்கர் தாங்கள் சேமித்து வைக்கும் தொகையை, வேண்டும்போது பாங்கியிலிருந்து பெற்று, கைத் தொழிலிலும் வியாபாரத்திலும் உபயோகிக்கின்றனர். அதனா லவர்கள் ஒன்றுக்குப் பதின்மடங்கான லாப மடைகின்றனர். அமெரிக்காவில் வெகு காலமாக அடிமைகளா யிருந்த நீகிரோ ஜாதியினரை, விடுதலை செய்வதற்காக எழுந்த கிளர்ச்சியில் வெற்றிபெற்ற மாபெருந் தலைவரும், அமெரிக்கா குடியரசின் அக்கிராசனர்களுள் பிரசித்தி பெற்றவருமான ஆபிரகாம் லிங்கன் கூட, தனது வெற்றியினால் திருப்தியடையாது, 'நம் நாட்டில் அடிமைத்தனம் அழிந்தது போலவே, கள்ளு சாராயக் குடியும் ஒழிந்துபோக வேண்டும். உலகத்தில் எந்தப் பாகத்திலும், ஓர் அடிமையாவது, ஒரு குடிகாரனாவது, இல்லாமற் போக வேண்டும். ஜனங்கள் இவ்வித ஜெயம் அடையும்போது தான், இவ் விருவகை விடுதலைக்கும் காரணமாயுள்ள நமது நாடானது மகா பெருமையை அடையும்' எனக் கூறியுள்ளார். இந்த மகான் அன்று போட்ட விதைதான் இப்பொழுது அமெரிக்காவானது, செல்வம், கல்வி, சுகம், கைத்தொழில், யாவற்றிலும் மேன்மையடைந்து, உலகத்திலேயே முதன்மையாக நிற்கக்

காரணமாயிற்று. அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் ஏற்படுத்தப் பட்டதனால், அதே வருஷத்தில் அந்நாட்டிலே கோர்ட்டுகளில் நூற்றுக்குப் பத்து வீதம் (10/:) கூட வழக்குகள் வரவில்லை யென்று, கோர்ட்டு அதிகாரிகளே மிகுந்த ஆச்சரியத்துடன் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இங்கிலாந்தில், சிறைச் சாலை முறையைக் குறித்து நீண்ட ஆராய்ச்சி செய்த, ஸர். ரக்கின்ஸ் பிரபு, "குடியை ஒழிப்பதற்காகச் சட்டம் செய்தால், கொலை களவு குற்றங்களை ஒழிப்பதற்காகச் சட்டம் செய்வதே யாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

## இரண்டு ஐரோப்பியர்கள் மடிந்தனர்

இங்கிலாந்தில் ஜன நடமாட்டம் இல்லாத சாலை ஒன்றில் ஒரு மோட்டார் வண்டி பழுதாகி நின்று விட்டது. நாலு மணி நேரங் கழித்து அந்தப்பக்கம் வந்தவர்கள் மோட்டார் வண்டிக்குள் பார்த்தபோது அங்கே இரண்டு மனிதர் இறந்து கிடப்பதைக் கண்டார்கள் பிரேதங்களைப் பரிசோதனை செய்த டாக்டர் ஜி. பி. எட்கர்டன் என்பவர், மரண விசாரணையின் போது "மதுபான மயக்கத்தி லிருக்கையில் குளிரில் அடிபட்டதால் இறந்ததாக"ச் சாட்சி கூறினார். ஜூரிகளில் ஒருவர் "நாலு மணி நேரம் குளிரில் அடிபட்டதால் மரணம் நேர்ந்து விடுமா?" என்று சந்தேகப் பட்டுக் கேட்டார். "ஆம்; மது மயக்கத்தி லிருக்கும் போது குளிரில் அடி பட்டால் மரணம் நேரக் கூடும்" என்று



டாக்டர் எட்கர்டன் பதில் அளித்து, ஒரு வைத்திய புத்தகத்தி லிருந்து பின் வரும் பகுதியைப் படித்துக் காட்டினார். "வயது வந்த மனிதர்கள் சாதாரணமாய்க் குளிரைத் தாங்குவார்கள். ஆனால் மதுபான போதையில் இருக்கும்போது தாங்குவது கஷ்டம். ஏனென்றால், குளிரினால் உண்டாகும் பலவீனத்தை மதுசாரம் அதிகப் படுத்துகிறது."—விமோசனம்.

## எலும்பெல்லாம் விஷமா இருக்கிறது.

தென் னாப்பிரிக்காவில் வெளியாகும் மது விலக்குப் பத்திரிகை குடியினால் கெட்ட ஒருவரின் பின் வரும் வேண்டுகோளை வெளியிட்டிருக்கிறது:—

"சாராயத்தினால் என் உடம்பு எலும்பெல்லாம் விஷமாகி இருக்கின்றது. இதை நான் வேண்டுமென்று செய்து கொள்ளவில்லை. என் இஷ்டத்துக்கு விரோதமாய் இந்த கதி எனக்கு நேர்ந்தது. என்னைப் போன்ற இன்னும் எத்தனையோ பேரை நான் அறிவேன்: பாழும் சாராயத்தை விற்கும் கடைகள் இருப்பதினால் தான் நாங்கள் எல்லாம் கெட்டோம். கடைகளை ஒழித்தால் நாங்கள் பிழைப்போம். மறுபடியும் மனிதர்களாவோம். பல முறை குடியின் காரணமாகவே நான் சிறையில் இருந்திருக்கிறேன். அப்போது குடிக்காம லிருத்தல் எனக்கு சாத்தியமா யிருந்தது, கடையைக் கண்டால் தான் ஆவலை அடக்க முடிய வில்லை."

## ஈசூப் சாயபுவின் மரணம்.

ஜோலார்ப் பேட்டை கடைத்தெருவில் ரொட்டிக் கிடங்கில் வேலை செய்து ரொட்டி பிஸ்கோத்துகளை விற்று வந்த ஈசூப் சாயபு என்பவன் ஓர் ஏழை முகம் மதிய சகோதரன். அவனுக்கு 5 சகோதரர்களும், வயது சென்ற தகப்பனாரும், கண் ணிழந்த வயது சென்ற தாயாரும், மனைவியும், இரு மக்களும் உண்டு. தகப்பனுக்கு மூத்த மகன். வயது சுமார் 35 இருக்கும். மிகவும் நல்ல குணமுடையவன்; சாந்த முள்ளவன்; கோபமும் மூர்க்கமுமான நடத்தைகள் அவனிடம் இல்லை. வியாபார தந்திரம் நிறைந்து ஆங்கிலோ இந்தியர்கள் டிரைவர்கள் கார்டு முதல் பணைக்காரர்கள் ஏழைகள் வரையில் தன் இன்சொல்லால் வசிகரித்து வஞ்சனையின்றிக் குழந்தைகளிடம் கூடத் தவறில்லாமல் வியாபாரம் செய்து வந்தான்.

நல்ல குணங்கள் பல நிறைந்திருந்தாலும் அவனிடம் ஒரு குற்ற மிருந்தது. அது தான் குடிப் பழக்கம். கள் சாராயம் குடிப்பது வழக்க மாயினும் குடித்த நிலைமையிலும் சண்டை சச்சரவுகள் மிஞ்சின வார்த்தைகள் அவன் எந்தச் சமயத்திலும் யாரிடமும் இது வரையில் உபயோகித்தவன் அல்ல. பலருக்கு அவன் குடிகாரன் என்று சந்தேகங் கூட உதிக்காமலிருந்தது. நான் அவனிடம் நெருங்கிப் பழகிய சமயம் விமோசனத்தைக் காட்டிப் படங்களை விளக்கிக் குடியை விடுமாறு வேண்டுவது உண்டு. அவனும் கூடவே “குடிப்பது கூடாது, கொரானில் கூடக் குடி கூடாது என்றுதான் கூறுகிறது” என்று பதில் சொல்லுவான்.